Registered as a Newspaper

யாழ். நகரில்
தரமான
போட்டோ ஸ்ராற்
பிரதிக்கு
ஞானம்ஸ்
ஸ்ருடியோ
301, Clock Tower Road
JAFFNA
T'Phone: 23067

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கலர் பிலிம் கருளிகள்
கூடிய விரைவில் கழுவிக்
(Proccessing & Printing)
கொள்வதற்கு
ஞானம்ஸ்
ஸ்ருடியோ
போஸ்காட் பிரதி ஒன்று
ரூ 5 75
நெகடிவ் ஆக்குவதற்கு
(Proccessing) இலவசம்!
301, Clock Tower Road,
JAFFNA. TPhone: 23067

கலர்: 1 யாழ்ப்பாணம் ஆகஸ்ட் ஆனி 01 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 06 (15-6-1986) UTHAYAN ... TAMIL DAILY கதிர்: 178

10 மணி நேர ஊரடங்கு

# கிளிநொச்சியில் நேற்றுமீண்டும் கடும் மோதல்

## முகாமுக்கு வெளியே வர முயன்ற துருப்புகள் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர்

— அலுவலகச் செய்தியாளர்; கே. ஆர். —

யாழ்ப்பாணம். ஜூன் 15

கிளிநொச்சியில் நேற்று மீண்டும் ஆயுதப்படையினருக்கும், போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் நடைபெற்றன.

கிளிநொச்சி நகருக்கு மத்தியில் உள்ள இராணுவ ... பொலிஸ் கூட்டு முகாமிலிருந்து துருப்புகள் வெளியேவர முயன்றபோது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அவர்களைத் தாக்கினர்.

அதன்பின்னர் மோதல் தொடர்ந்தது பின்னர் துருப்புக்கள் முகாமுக்குச் சென்று அங்கிருந்து 'ஷெல்' தாக்குதல் நடத்தினர் என்று அறியவருகிறது.

நேற்றுக்காலை தொடக்கம் மாலைவரை மோதல்கள் நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

அதனையடுத்து கிளிநொச்சியில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நேற்று இரவு 8 மணி தொடக்கம் இன்று காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்தது.

நேற்றைய மோதல் சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

நேற்றுக்காலை சுமார் பத்து மணியளவில் கிளிநொச்சி பொலிஸ்—இராணுவ கூட்டு முகாமில் இருந்து ஏராளமான சிப்பாய்கள் வாகனங்கள் சகிதம் பக்கமாக ரயில் பாதையூடாகவும் பற்றைப் பாதையூடாகவும் வெளியே வந்தனர்.

அவர்களை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் பலத்த தாக்குதல்களை நடத்தினர்.

போராளிகள் தரப்பிலிருந்து கிளிநொச்சி முகாமை நோக்கி 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இரண்டு 'ஷெல்' குண்டுகள் முகாமிற்குள் விழுந்து வெடித்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் சிப்பாய்கள் தரப்பில் சிலர் மரணமடைந்தும் காயமடைந்
(4 ஆம் பக்கம் பார்க்க)

### விதி அவரை தொடர்ந்தது; விட்டு வைக்கவில்லை!

கொழும்பு, ஜூன் 16

மே 3 இல் இடம் பெற்ற கட்டுநாயக்கா எயர்லங்கா விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிர்தப்பியவர் ஜூன் 11 இல் திருமலை நகரில் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

இந்தத் துரதிருஷ்டசாலி மூதூரைச் சேர்ந்த ஏ. எச். ஜெயினுதீன்.

அனுராதபுரம் நீதிவான் ரன்பண்டா அபயசிங்க முன்னிலையில் நடந்த மரண விசாரணையில் இத்தகவல் வெளியானது

எயர் லங்கா குண்டுவெடி விபத்தில் காயப்பட்ட ஜெயினுதீன் 15 தினங்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். காயமடைந்ததற்கான நஷ்ட ஈட்டுப்பணத்தைப் பெற கொழுப்பு வரும்படி எயுர்லங்கா கடிதமூலம் இவரை அழைத்து இருந்தது.

அதற்கு இணங்க திருமலையில் இருந்து கொழும்புக்கு பஸ்ஸில் செல்கையில் குண்டு வெடிப்பில் அகப்பட்டுக் கொண்டார்.

விமானக்குண்டு வெடிப்பில் உயிர் தப்பியவர் பஸ்குண்டு வெடிப்பில் உயிர் துறந்தார்.

(இ-எ)

# வல்வெட்டித்துறையில் சிலிண்டர் தாக்குதல்

## 4 சிப்பாய்கள் பலி என புலிகள் அறிவிப்பு

— கரவெட்டிச் செய்தியாளர் —

கரவெட்டி, ஜூன் 15

நேற்றுக் காலை வல்வெட்டித்துறை முகாமில் இருந்து சிப்பாய்கள் இருமருங்காலும் வெளியே வந்தபோது புலிகள் சிலிண்டர் தாக்குதலை மேற்கொண்டனர்

இத் தாக்குதலில் நான்கு சிப்பாய்கள் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும், தங்கள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனவும் ''புலிகளின் குரல்'' என்னும் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் அதாவது வெள்ளிக்கிழமை வல்வை முகாமிற்கு ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் வந்திறங்கினர்.

சிப்பாய்கள் வந்து குவிந்ததால் அப் பகுதியில் உள்ள மக்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்கள் பாதுகாப்
(4ஆம் பக்கம் பார்க்க)



ரஷ்யாவுக்குப் போகு முன்னர் ஒருக்கா இந்தியாவுக்கு வளைஞ்சு குடுத்துப் பாக்கும் தந்திரமோ அல்லது உண்மையா தீர்வில் அக்கறையோ..?

### தமிழ் ஊழியர் வேலைக்கு செல்ல மறுப்பு

திருகோணமலை ஜூன் 15

திருகோணமலை ரயில் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் ஊழியர் பாதுகாப்பின்மை கருதி வேலைக்குச் செல்ல மறுத்து வருகின்றனர்.

இது சம்பந்தமாக மாவட்ட இணைப்பு அதிகாரிக்கு ரயில் நிலையத் தமிழ் ஊழியர்கள் முறையிட்டுள்ளனர்.

(இ-எ-150)

# இலங்கையின் விளக்கத்துடன் டில்லிக்கு பேர்னட்

## நாளை பயணமாகிறார்

கொழும்பு, ஜூன் 15

இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் சிதம்பரம் குழுவிடம் கையளித்த யோசனைகள், தொடர்பான விளக்கங்கள் வியாக்கியானங்கள் தயாராகிவிட்டன.

அவற்றை எடுத்துக்கொண்டு புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னட் திலகரத்தின டில்லிக்குச் செல்லவுள்ளார்.

திரு திலகரத்தின அநேகமாக நாளை திங்கட்கிழமை டில்லிக்குப் பயணமாவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினை தீர்வுக்கான யோசனைகள் தொடர்பாக இலங்கை அரசின் விளக்கங்கள், வியாக்கியானங்கள் தயாராகிவிட்டன.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பேர்னட் திலகரத்தினவிடம் அரசின் விளக்கங்கள், ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினால் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

இலங்கைஅரசின்விளக்கங்களுடன் திரு. பேர்னட் திலகரத்தின அனேகமாகத் திங்கள் புதுடில்லி பயணமா
(4ம் பக்கம் பார்க்க)

# ரஷ்ய தலைவர் கொர்பச்சேவ்வை சிவ்சங்கர் சந்தித்தார்

## ராஜீவின் கடிதம் கையளிப்பு

புதுடில்லி ஜூன் 15

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. சிவசங்கர் நேற்றுச் சனிக்கிழமை ரஷ்யத் தலைவர் மிக்காயில் கொர்ப்பச்சேவைச் சந்தித்தார்.

பல்கேரியாவில் இருந்து புதுடில்லி திரும்பும் வழியில் இந்த குறுகிய நேரச் சந்திப்பு நிகழ்ந்தது

சந்திப்பின்போது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் செய்தி ஒன்றை கொர்பச்சேவிடம் சிவ்சங்கர் கையளித்தார்.

மாஸ்கோவில் உள்ள இந்திய தூதரகப் பொறுப்பதிகாரி கி. வி. ரங்கநாதன் மற்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் ஆகியோரும் சந்திப்பின்போது கலந்து கொண்டனர்.

(இ)

### கொழும்பு வீடு ஒன்றில் 63 கிலோ கிராம் ஜெலிக்னைற் சிக்கியது

#### 4 வடபகுதித் தமிழர் கைது

கொழும்பு, ஜூன் 15

கொழும்பு நகரில் பொலீஸ் பார்க் அவெனியூவில் உள்ள வீடு ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 63 கிலோகிராம் ஜெலிக்னைற் வெடிமருந்து பொலீசாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக நான்கு வடபகுதித் தமிழர் கைதுசெய்யப்பட்டனர்

காங்கிரீட்டில் செய்யப்பட்ட சிலிண்டர் ஒன்றினுள் இவ்வெடி மருந்து நிரப்பப்பட்டு புதைக்கப்பட்டு இருந்ததாம்.

எயர் லங்கா விமானத்தைத் தகர்த்த குண்டு போன்று மூன்று குண்டுகளைத் தயாரிக்க இந்த வெடிமருந்து போதுமானது.

இப்படிப் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-எ)

### திருமலை வன்செயல்கள்: இரு தமிழர்களின் சடலங்கள் எரிந்த நிலையில் கண்டுபிடிப்பு

#### ஏனையோர் மர்மம் நீடிப்பு

திருகோணமலை, ஜூன் 15

ஜூன் 4ஆம் திகதி முதல் திருகோணமலை நகரின் சுற்றுப்புறங்களில் தமிழருக்கு எதிராக இடம்பெற்ற வன்செயல்களில் உயிரிழந்த தமிழர்களில் இரண்டு பேரின் சடலங்கள் மட்டுமே எரிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆண்டான்குளம் கணேசு ஒழுங்கையில் வசித்துவந்த தம்பிராசா, தம்பிராசாவின் மனைவி ஆகியோரின் சடலங்கள் எரிந்துபோன நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

வில்லுப்பாட்டுக் கலை
(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

15 — 6 — 1986
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
8 53 முதல் 10 23வரை
ராகுகாலம்:
4 23 முதல் 5.53 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அட்டமி பின்னிரவு 12.31 வரை

### மூதூர் அகதிகள் மட்டக்களப்புக்கு

மட்டக்களப்பு ஜூன் 15

ஈச்சிலம்பத்தை அகதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து மூதூரில் இருந்து தமிழ் அகதிகள் மட்டக்களப்புக்குச் செல்லத் தொடங்கியிருக்கின்றார்கள்

நேற்றுமட்டும், மட்டக்களப்பில் உள்ள அம்பன் தாளுவெளி அகதி முகாமுக்கு மூதூரில் இருந்து
(4ஆம் பக்கம் பார்க்க)

### மண்டைதீவில் நடந்த தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மண்டைதீவில் கடற்படையினர் மீது நேற்று போராளிகள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை அடுத்து பீரங்கிப்படகில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் ஒருவர்காயம் அடைந்தார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுப்பகல் இரண்டு மணியளவில் மண்டைதீவுக் கடற்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பெரிய பீரங்கிப் படகில் இருந்து இறக்கப்பட்ட இரண்டு பிளாஸ்டிக் படகுகளில் சிப்பாய்கள் கரையை நோக்கி வந்தனர்.

சிப்பாய்களின் வருகையை எதிர்த்து அங்கு சென்றிக்கு நின்ற போராளிகள் இவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். சிப்பாய்களும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவத்தினால் படையினருக்கு ஏற்பட்ட சேதம் பற்றி தெரியவரவில்லை.

(இ-10)

### குண்டு புரளிக்கு 3 மாதம்

மட்டக்களப்பு, ஜூன் 15

குண்டுப் புரளியை உருவாக்குபவருக்கு அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் 3மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

பொலீஸ் ஆணையாளர் திரு. ஏ. எஸ். செனவிரத்தின இதனை சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அறிவித்திருக்கிறார்.

(இ-எ-21)

### திருமலையில் தபால் பொதிகள் தேக்கம்

திருகோணமலை, ஜூன்15

கடந்த சில தினங்களாக திருகோணமலை நகரில் இருந்து தபால் பொதிகள் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

தபால் பொதிகள் கொண்டு செல்லும் தமிழ் ஊழியர் ஒருவர் ரயில் நிலையத்தில் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தே, தபால் பொதிகளை ரயில் நிலையத்திற்குக் கொண்டு செல்லத் தமிழ் ஊழியர்கள் மறுத்துவிட்டனர்.

இதனால் வெளியூர்த் தபால் பொதிகளும் திருமலைக்கு வருவது தடைபட்டுள்ளது.

(இ-எ-150)

# இலங்கை தமிழ் பெண்ணும் கைது

சென்னை, ஜூன் 14

இலங்கை அரசுக்காக உளவு பார்த்தார் என்ற சந்தேகத்தில் இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவரும் சென்னைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள 6 பேரை விசாரணை செய்ததைத் தொடர்ந்தே, இலங்கைத் தமிழ்ப் பெண் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது.

(இ-எ-2)

### திருமலையில் 60 பேர் தடுத்துவைப்பு

திருகோணமலை ஜூன்15

திருகோணமலை நகரில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் கைதான தமிழர்களில் 60 பேர் மட்டுமே விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

(இ-எ-150)

### அடுத்த சில தினங்களில் பென்சன்?

யாழ்ப்பாணம் ஜூன், 15

எதிர்வரும் வியாழன், வெள்ளிக் கிழமைகளில் கச்சேரி பென்ஷன்காரர்களுக்கு பென்ஷன் வழங்
(4ம் பக்கம் பார்க்க)

ROCK Engineers & Contractors
IN
TUBE WELLS, PLUMBING, FITTINGS, TANK BUILDING
and other Construction Works.

Tubewell Water is Pure, Fresh, Healthy & Safty.

குழாய்க் கிணறுகளை அமையுங்கள்
நாட்டை வளம்படுத்துங்கள்.
உங்கள் தேவைகள்:
(1) வீட்டுத் தேவை
(2) பெரிய அளவிலான பயிர்ச் செய்கை
(3) தொழிற்சாலைக்கான நீர்த் தேவை
(4) உவர்நீரைத் தவிர்த்து நல்ல நீரைப் பெறுதல்
எதுவானாலும் எம்முடன் கலந்து ஆலோசியுங்கள்.

றொக் எஞ்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு படுகொலைகள் பற்றி விசாரணை வேண்டும்

## மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மண்டைதீவுக் கொலைகளை விசாரிக்க கமிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

பாதுகாப்புப்படையினரும், ஊர்காவல் படையினரும் இந்த நாட்டின் அப்பாவித் தமிழ் குடிமக்களை கொன்று குவிப்பதையும், அவர்கள்மீது புரிந்துவரும் மிருகத்தனமான மிலேச்சத்தனமான அட்டூழியங்களையும் பார்க்கும் பொழுது அரசாங்கம் தமிழ் மக்களை அழிப்பதற்கு திட்டமிட்டுச் செயல்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம் மேற்கண்டவாறு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியது. திரு. அ. குமரகுரு கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சில தினங்களுக்கு முன்னர் மண்டைதீவு கடற்கரையில் முப்பத்திநாலு அப்பாவி மீனவர்களை கண்டதுண்டமாக வாள் கொண்டு வெட்டியும், சிலருடைய கண்களைத் தோண்டி வீசியும், மர்ம உறுப்புகளை வெட்டி எறிந்தும், கைகளை உயர்த்தச் சொல்லிவிட்டு தலையிலும் நெஞ்சிலும் சுட்டுக்கொன்றும், வெட்டுத் தலைகுனியும் வகையில் கறுப்புச் சட்டை அணிந்தவர்கள் அட்டூழியம் புரிந்துள்ளனர்

இவை ஒரு நாட்டின் படை வீரர்களுக்குரிய ஒழுக்கக் கோட்பாடுகளை மீறும் செயல்கள் மாத்திரமின்றி ஒரு நாகரிக சமுதாயத்தின் நெறிகளுக்கு ஒவ்வாத அடாவடித்தனங்களும் ஆகும்.

வல்வெட்டித்துறை நகரை தரை, வான், கடல் ஆகிய மும்முனைகளிலிருந்தும் தொடர்ந்து பல நாட்களாக பாதுகாப்புப் படையினர் பயங்கரமாக தாக்கி அங்கு பாரிய சேதங்களை விளைவித்து வருவது இவ்வூருக்கு எதிராக அரசாங்கம் பிரகடனப்படுத்தாத யுத்தமொன்றை நடத்தி வருகிறதோவென்று எண்ணத்தோன்றுகிறது.

காரைநகரிலும் பெரிய அளவில் கடற்படையினரால் தாக்குதல்கள்விட்டுவிட்டு நடத்தப்படுகின்றன.

இவைகளையெல்லாம் அவதானிக்குமிடத்து இந்நாட்டின் அரசமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள், குறிப்பாக உயிருக்கும் உடைமைக்கும் அரசு அளிக்கவேண்டிய பாதுகாப்புகள், தமிழ் குடிமக்களுக்குக் கிடையாது என்ற நிலையை அரசாங்கம் வெளிப்படையாக ஏற்றுக் கொண்டுள்ளதென்பது தெரிகிறது.

ஆகவே பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், மண்டைதீவுக் கொலைகளை விசாரிக்க ஒரு விசாரணைக்கமிஷன் நியமிக்கப்படவேண்டுமென்றும்வல்வெட்டித்துறைத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தவேண்டுமென்றும் இந்நாட்டின் ஜனாதிபதியை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

இப்படித் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

(இ)

## சினிமா தொழிலைத்தேடியவர் இன்று தயாரிப்பாளர்

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் சினிமாத்துறையில் ஏதாவது ஒரு வேலை கிடைக்காதா என்று அலைந்த ஒருவர் இன்று திரைப்படத் தயாரிப்பாளராகி இருக்கிறார். அவர் தான் தேவநாதன்.

இவர் ராமண்ணா வினசிவகாமி பிக்சர்ஸ், ஈ வி ஆர். பிக்சர்ஸ் ஆகிய இடங்களில் தயாரிப்பு நிர்வாகியாகவும் ஹிந்து ரங்கராஜனின் நட்பு கிடைத்ததன் காரணமாக நாம் பிறந்த மண் படத்துக்கு தயாரிப்பு நிர்வாகியாகவும் ஆனார்.

கௌரவம், தேவி கருமாரி அம்மன் ஆகிய படங்களுக்கு இணைத் தயாரிப்பாளரானார்.

அதன் பிறகு சில காலம் திரை உலகில் எந்தத் துறையிலும் சரியான கவனம் செலுத்த முடியாமல் இருந்தார். அப்போதெல்லாம் அடிக்கடி லட்சுமிகாந்தனைச் சந்தித்து வந்தார்.

திடீரென அவர் ஒரு நாள் பாலாஜியிடம் அழைத்துப் போய் அங்கே தயாரிப்பு நிர்வாகியாகப் பணிபுரிய உதவினார்.

சுமார் இரண்டு ஆண்டுக்குள் பன்னிரண்டு படங்களுக்குத் தயாரிப்பு நிர்வாகியாகப் பணி புரிந்தார்.

ஏற்கனவே திரையுலகில் இருந்த காரணத்தாலும் பாலாஜியிடம் பணியாற்றியதாலும் திறமையாக வளர முடிந்தது.

அப்போது தான் அலாவுதீன் என்பவரது நட்பு இவருக்குக் கிடைத்தது தானும் படம் தயாரிக்க ஆசை என்று அவரிடம் தேவநாதன் கூற, அவரும் எப்போது நீங்கள் விரும்பினாலும் உங்களுக்கு உதவ நான் தயார் என்றார்.

பாலாஜி அவர்கள் விடுதலை படப்பிடிப்புக்காக லண்டன் சென்றிருந்த சமயம் தான் அங்கே எப்படி பணியாற்றுவது என்பதைப் பற்றிச்சிந்தித்தார்,

பாலாஜி சென்னை திரும்பியதும் அவரிடம் தனது ஆசையை வெளியிட்டார் உடனே பாலாஜி நிச்சயமாக உன்னால் ஒரு திறமையான தயாரிப்பாளனாக மாற முடியும் என்று கூறி தனது ஆசீர்வாதங்களையும் தெரிவித்தார்.

பாலாஜியின் பெருந்தன்மையை ஒரு நாளும் மறக்க முடியாது என்று கூறுகிறார் தேவநாதன்

## அரசின் ஒடுக்கு முறைகளை எதிர்த்துப் போராடியவர் சரத்

### மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்க கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூன்.15

முதலாளித்துவ நவகாலனித்துவ சிங்கள பேரினவாத ஐ. தே. க அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளை நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் மட்டுமல்லாமல் நிர்வாக, நீதித்துறைகளிலும் எதிர்த்துப் போராடியவர் சரத்.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் ஆதரவில் நல்லூர் இந்து விடுதியில் சரத் முத்தெட்டுவேகம அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய யாழ் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் திரு. பொன் குமாரசாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

சட்டத்தரணி திரு.இ சிவரத்தினம் அஞ்சலிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு குமாரசுவாமி தொடர்ந்து கூறியதாவது;-

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இயற்றிய அடக்குமுறைச் சட்டங்கள் ஒன்றா? இரண்டா?

இவ்வரசாங்கத்தின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், பாதுகாப்பு வலயச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவை தமிழ்மக்களுக்கு மட்டும் பாதகமானவை அல்ல, சிங்கள மக்களையும் பாதிக்கும் சட்டங்கள் என்று எச்சரிக்கை செய்தவர் சரத்.

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் சுமார் இரண்டாயிரம் இளைஞர்கள் கைதாகி உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை (இடதுசாரி) சேர்ந்த திரு. கே.செந்தில்வேல் பேசுகையில் இன்று சிறைக்கூடங்களில் கூட அடக்குமுறையைக் கண்டித்து சிங்கள — தமிழ் இளைஞர்கள் ஒன்றுபட்டுப் போராடுகிறார்கள்.

தொழிலாள வர்க்கத்தின் கொதப் பிரச்சினைகளை முன்வைத்து பொது ஐக்கிய முன்னணி மூலம் இனவாத உணர்வுகளைக் கடந்து வெகுஜனப் போராட்டங்களை உருவாக்குதல் அவசியம் என்றார்

அடுத்துப் பேசிய வட பிரதேச தொழிற் சங்கக் கூட்டுக்குழு அமைப்பாளர் திரு எஸ். விஜயானந்தன் கட்சியின் கோட்பாடுகள் வேலைத் திட்டங்களுக்கு அமைவாகவே சரத் செயற்பட்டார் என்றார்.

தேசிய கலை இலக்கிய பேரவை பிரமுகர் திரு. க தணிகாசலம், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க பொது அமைப்புச் செயலாளர் திரு. என் சோமகாந்தன், மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்க பொதுச் செயலாளர் திரு. சோ. தேவராஜா ஆகியோரும் உரையாற்றினார்கள் திரு. இ. சிவரத்தினம் தலைமை உரை நிகழ்த்தினார்.

(இ-9)



மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தால் நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற அமரர் சரத் முத்தெட்டுவேகம அஞ்சலிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படம்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த சட்டத்தரணி இ. சிவரத்தினம் தலைமையுரை நிகழ்த்துகிறார். முற்போக்கு எழுத்தாளர் சங்க அமைப்பாளர் என். சோமகாந்தன், இலங்கை இடதுசாரிக் கம்யூனிஸ்ட் பிரமுகர் கே. செந்தில்வேல் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(இ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## மன்னாரில் பீரங்கி தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மன்னாரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற புலிகள் சிப்பாய்கள் மோதல்களை அடுத்து பின்வாங்கிய சிப்பாய்கள் பொதுமக்கள்வாழும் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்

இதன் காரணமாக திருக்கேதீஸ்வரபகுதியில் உள்ள பதினைந்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

மந்தைப் பகுதியிலும் ஷெல் தாக்குதல்கள்மேற்கொள்ளப்பட்டன.

(உ-10)

### வீடு விற்பனைக்கு

மாகியம்பதி, கந்தரோடை ரோட்டில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 6 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: க அப்புத்துரை மாஸ்டர், 'மலர்இல்லம்', அளவெட்டி தெற்கு.

## மறைமாவட்ட வேதாகமப் போட்டி

உடுப்பிட்டி, ஜூன் 15

யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் நடத்தும் வேதாகம மறைக்கல்விப் போட்டித் தேர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

(ஓ-157)

## பணிப்பாளர் சபைத் தெரிவு

வட்டுக்கோட்டை, ஜூன் 15

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையைத் தெரிவதற்கான தேர்தல் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு மு. கந்தையா தலைமையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

கடந்த 1980 ஆம் ஆண்டு ஆனி மாதம் 29 ஆம் திகதி இவ்வைத்தியசாலை பணிப்பாளர் சபைத் தெரிவு நடைபெற்றது. இதன் பின்னர் இன்று இத் தெரிவுக்கான தேர்தல் நடைபெறுகின்றது.

11 பேர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவார்கள். (இ - 161)

வேலணை பல:நோ கூ. சங்கம்
(வரைவுள்ளது)

**வாக்காளர் இடாப்பு பூர்த்தியாக்கல் - 30-6-86**

சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தலுக்காக 30-06-1986ல் அங்கத்துவ இடாப்பை பூர்த்தியாக்குவதற்கு 10-6-86ல் கூடிய (புதிய) இயக்குனர் சபை தீர்மானித்துள்ளது

ஆகவே இச்சங்கத்தில் அங்கத்துவம் பெற விரும்புபவர்கள் பூர்த்திசெய்த அங்கத்துவ விண்ணப்பப் பத்திரங்க (2 பிரதிகள்) ளுடன், பங்குப் பணமாக ரூ. 10/-வை தத்தமது கிளை முகாமையாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவும்

பங்குகளை முழுமையாக்கவேண்டிய அங்கத்தவர்கள் மீதிப் பணத்தைக் கட்டி ரூபா 10/- ஆக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர்

## குருத்துவ பட்டாபிஷேகம் பெறும் எழுவர்

எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் வண. டி. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஏழு புதிய குருக்கள் திருநிலைப்படுத்தப்ப வுள்ளனர்.

அவர்கள் வருமாறு:

1. இஸ்ரலின்:- உரும்பராயை பிறப்பிடமாகக் கொண்டவர். திரு திருமதி. இராஜேந்திரன் தம்பதியினரின் புத்திரன். தமது கல்வியை உரும்பராய் றோ. க பாடசாலை, உரும்பராய் இந்துக் கல்லூரி, புனித மாட்டீனார் குருமடம், சென்னை பூந்தமல்லி திரு இருதயக் கல்லூரி, அம்பிற்றியா தேசிய குருமடம், யாழ். புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம் ஆகியவற்றில் பயின்றார்

2 ஜெராட்சவிரிமுத்து: யாழ் நகரைச் சேர்ந்த இவர் அமரர் பீற்றர் சவிரிமுத்து திருமதி மார்கிறட் சவிரிமுத்துவின் புத்திரர். தமது கல்வியை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ் பல்கலைக் கழகம், அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி, யாழ். புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம் ஆகியவற்றில் பயின்றார்.

3. செபஸ்ரீ நீக்கிலஸ்:- நாவாந்துறையைச் சேர்ந்த இவர் அமரர் செபஸ்தி. திருமதி செபஸ்தியின் புத்திரன். தமது கல்வியை நாவாந்துறை றோ. க பாடசாலை, கொழும்புத்துறை வித்தியாலயம், கனகரெத்தினம் மகாவித்தியாலயம், புனிதவளன் குருமடம், மட்டக்குளி குருமடம், கண்டி தேசியக்குருமடம். யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம், பண்டாரவளை திருஇருதயநாதர் மடம் ஆகியவற்றில் பயின்றார்.

4. கிறிஸ்ரி செல்வராசா:- மிருசுவிலைச் சேர்ந்தவர். திரு. திருமதி ஜெயராஜா புளோறன்ஸ் தம்பதியரின் புத்திரர். தமது கல்வியை மிருசுவில் றோ க பாடசாலை. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, திருவுளப்பணியோர் சபை, திருச்சி புனித சின்னப்பர் குருமடம். யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம், ஆகியவற்றில் பயின்றார்.

5. ரூபன் மரியாம்பிள்ளை:- சில்லாலையைச் சேர்ந்தவர். திரு. திருமதி மரியாம்பிள்ளையின் புத்திரர். தமது கல்வியை சில்லாலை றோ. க. பாடசாலை, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, புனித மாட்டீனார் குருமடம், பூந்தமல்லி திரு இருதயக் குருத்துவக் கல்லூரி, அம்பிற்றியா தேசிய குருத்துவக் கல்லூரி, யாழ். புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம் ஆகியவற்றில் பயின்றார்.

6. நீக்கிலஸ் குரூஸ்:- முள்ளிக்குளத்தில் பிறந்தவர். திரு. திருமதி பிரான்சிஸ் குரூஸ் தம்பதியரின் புத்திரர். தமது கல்வியை முள்ளிக்குளம் ஆரம்ப பாடசாலை, யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ் புனிதவளனார் குருமடம், யாழ். அ. ம. தி. குருமடம், பண்டாரவளை திருஇருதயநாதர் குருமடம், கண்டி தேசிய குருமடம் ஆகியவற்றில் பயின்றார்.

7. தொ. யே சந்திரன்:- புதுக்குடியிருப்பில் பிறந்தவர். திரு. திருமதி தொம்மையப்பு ஞானம்மா தம்பதியரின் புத்திரர். தமது கல்வியை இரணைப்பாலை றோ க பாடசாலை, யாழ். புனித மாட்டீனார் குருமடம், புனித பத்திரிசியார் கல்லூரி, தமிழ்நாடு கருமத்தூர் அருளானந்தர் கல்லூரி, அம்பிற்றியா தேசிய குரு மடம், யாழ். புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம் ஆகியவற்றில் கல்வி பெற்றார்.

## கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூன் 15

முத்திரைச் சந்தியிலுள்ள ஒரு பொறியியல் வேலைத்தளத்தில் வியாழன் இரவு கொள்ளைச் சம்பவம் ஒன்றுநடந்தது.

வேலைத்தளத்தின் கூரையை பிரித்து இறங்கிய கொள்ளையர், 12 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளை அடித்துச் சென்றனர்.

சென்ற 30 ஆம் திகதியும் இவ் வேலைத்தளத்தில் கொள்ளை முயற்சி இடம் பெற்றது என்று தெரிகிறது. (இ - 5)

## பொருட்காட்சி

சாவகச்சேரி, ஜூன் 15

சாவகச்சேரிவட்டாரப் பாடசாலைகளில் பாடசாலை மட்டத்தில் நடைபெறவிருக்கும் கலை, கைப்பணி, விஞ்ஞானப் பொருட்காட்சிகள் இம் மாதம் 17 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

கைதடி குருசாமி வித்தியாலயத்தில் 17 ஆம் திகதியும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 26 ஆம், 27 ஆம் திகதிகளிலும் மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம், மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், நுணாவில் மேற்கு அ.த.க பாடசாலை, அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றில் 25 ஆம் திகதியும் பொருட்காட்சி நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## நவாலியில் சரத்துக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 15

நவாலி பிரசைகள் குழுக் கூட்டத்தில் மறைந்த கலவானை எம். பி. சரத் முத்தெட்டுவேகமவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

சரத் உண்மையான தேசிய வீரர். அவரின் மறைவு குறித்து இலங்கை அன்னை கண்ணீர் வடிக்கின்றார்.

இப்படி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நவாலி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு பிரசைகள் குழுத் தலைவர் திரு. சி ஜே இளையதம்பி தலைமை வகித்தார்.

செயலாளரான திரு. ஜே. சின்னத்துரையும் பேசினார்.

(இ-எ)

## படகு விபத்தில் மூவர் மரணம்

வேலணை, ஜூன் 15

எழுவைதீவில் இருந்து பருத்தித்தீவிற்கு ஏழு பேர்களுடன் சென்ற படகு ஒன்று நடுக் கடலில் மூழ்கியது. படகில் சென்றவர்களில் மூவர் இறந்தனர்.

இப்பரிதாப சம்பவம் ஒரு சில தினங்களுக்கு முன் ஊர்காவற்றுறையை அண்டிய கடலில் நடந்தது.

சம்பவம்பற்றி மேலும் அறியப்படுவதாவது:-

எழுவைதீவில் வீடுகளைக் கட்டுவதற்கு பருத்தித்தீவு ஊரிமண்தான் பாவிப்பது வழக்கம். சம்பவதினம் எழுவைதீவைச் சேர்ந்த ஏழுபேர் பிளாஸ்டிக் படகு ஒன்றில் ஊரிமண் ஏற்றுவதற்காக பருத்தித்தீவிற்குச் சென்றனர்.

அங்கு ஊரிமண்ணை படகில் ஏற்றிக்கொண்டு வரும்போது பாரம் அதிகரித்ததால் படகு நடுக்கடலில் மூழ்கியது.

அதில் இருந்த ஏழு பேரும் நீரில் மூழ்கினார்கள். இவர்களில் மூவர் மரணமானார்கள். நான்கு பேர் உயிர் தப்பி நீந்தி கரை சேர்ந்தனர்.

உயிர் தப்பிக் கரை சேர்ந்தவர்களின் பெயர்கள் வருமாறு:

அ ஜேக்கப் பெர்னாண்டோ, கிங்ஸ்லி பெர்னாண்டோ, இ. சிங்கராசா, எஸ். லூர்த்துநாயகம்.

இறந்தவர்களின் பெயர்கள் வருமாறு;

இ. ஞானசீலன் (இராசன் என்று அழைக்கப்படுபவர்) வயது 28 திருமணமானவர் இவருக்கு ஒரு குழந்தையுண்டு

அ. இராசேந்திரன் (வயது 70)

இ. ஜெயராஜா (வயது 22)

இம் மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

தந்தை, மகன், மருமகன் எனத் தெரியவருகிறது. (இ)

## மண்டைதீவு படுகொலைகளுக்கு கண்டனம்

வட்டுக்கோட்டை, ஜூன்.15

தமது நாளாந்த ஜீவனோபாயத்துக்காக தொழில் செய்து கொண்டிருந்த அப்பாவிக் கடற்றொழிலாளர்கள் ஸ்ரீலங்கா இனவாத அரச படையினரால் கற்பனை செய்ய முடியாத வகையில் மிலேச்சத்தனமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். இதனை எந்த நாகரிகம் படைத்த மனித சமுதாயமும் கண்டிக்காமல் இருக்க முடியாது

தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு பொதுச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் வெளியிட்ட அறிக்கை இவ்வாறு தெரிவிக்கின்றது.

(இ-161)

**அறிவித்தல்**

**துரை மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிறுவனம்**

66 & 68, ஸ்ரான்லி வீதி, R. G- கட்டிடம், யாழ்ப்பாணம்

மேற்படி நிறுவனத்தின் வியாபார நிமித்தமும், மற்றும் வேறு வகைகளிலும் கொடுக்கல், வாங்கல் மூலம் பாதிப்புற்றவர்கள் தமது முறையீடுகளை எங்கள் இணக்க சபைக்குக் கொடுத்துள்ளார்கள். இதன் நிமித்தம் நாம் கடை உரிமையாளர் அவர்களின் அன்னையாரை வினவியபொழுது அவர்கள், இது தொடர்பாக சில விளக்கங்களை எம்மிடம் கொடுத்துள்ளார்கள்- ஆகவே இது தொடர்பான விசாரணை ஒன்று கந்தர் மடம் இணக்க சபை ஆரம்பித்துள்ளதால் பாதிப்புற்றவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி இத்தால் வேண்டப்படுகின்றனர். முதலில் உங்கள் கோரிக்கைகளை எழுத்து மூலம் இணக்க சபைத் தலைவருக்குக் கையளிக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள். இதன் பின்னர் விசாரணை பற்றிய திகதி அறிவிக்கப்படும்.

தங்கள் கோரிக்கைகளை 21-06-86ஆம் திகதி சனிக்கிழமை அன்று பிற்பகல் 3-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை கந்தர் மடம் பண்டிதர் சனசமூக நிலையத்தில் கையளிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

இவ்விசாரணை முடியும் வரை பாதிப்புற்ற யாரும், இவ்விடயம் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் இத்தால் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

நா. தியாகராசா,
கந்தர்மடம் இணக்க சபைத் தலைவர்.

கந்தர் மடம்
இணக்க சபை,
பண்டிதர் சனசமூக நிலையம்,
யாழ்ப்பாணம்
1986-06-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

சுயநலம் நீங்கினுல் தெய்வீகம் தானே வரும்.
—தர்மசக்கரம்.

உதயன்
உண்மை — அஞ்சாமை — நடுநிலைமை
இல. 15 [illegible]
[illegible] வீதி,
யாழ்ப்பாணம். 15 பங்குனி [illegible] 24800
22078
உ. வே.28

## காலம் நெருங்குகிறதா?

தமிழ்ப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும் உத்தேசம் இலங்கை அரசாங்கத்துக்கு இல்லை. ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு ஆகக் கடைசியாக அனுப்பிய கடிதம் அதனை ருசுப்படுத்துகிறது. இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்து ஒரு சொல் கூட அந்தக் கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

தமிழ்ப் பகுதிகளில் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுகிருர்கள். போராளிகளை ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு ஆயுதப்படைகள் அத்துமீறல்களை மேற்கொள்கின்றன.

பொதுமக்கள் கொல்லப்படுவது நிறுத்தப் பட்டால் மட்டுமே சமரசப் பேச்சுவார்த்தைகளைச் சரிவர நடத்த முடியும் என்பது இந்தியாவின் வாதம்.

இந்தியா என்ன, நீதி நியாயம் பேணும் எவரும் அதனையே சொல்வர்; செய்வர் தர்மிஷ்டம் பேசும் இந்த நாட்டு அரசிடம் நீதி என்ன நிறம் என்று கேட்க வேண்டிய நிலை!

அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வதன் மூலம் அவர்களைப் பயமுறுத்தலாம் என்று அரசு நினைக்கிறது. அதன் மூலம், தான் வழங்கும் சில சலுகைகளைத் தமிழர்களை நிர்ப்பந்தமாக ஏற்கச் செய்யலாம் என்றும் அது மனப்பால் குடிக்கிறது.

தென்னிலங்கையில் தாக்குண்டதும் தனது தாயகத்துக்கு, பிறந்த மண்ணுக்கு அகதிகளாகக் கப்பலிலும், ரயிலிலும் தமிழர்கள் ஒரு காலத்தில் வந்தது உண்டு.

இப்போது அவர்கள் தங்கள் தாயகத்திலேயே அகதிகளாக வேண்டிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குப் பின்னரும் தமிழர்கள் தமக்கு உரிய உரிமைகளை அன்றி சலுகைகளை ஏற்கமாட்டார்கள்.

இந்தச் சின்ன விடயம் அரசுக்குத் தெரியவில்லை. வன்செயல் மூலம் — இன ஒழிப்பு மூலம் தமிழர்களை தொடர்ந்து அடிமைகளாக வைத்திருக்கலாம் என்று அரசாங்கம் தப்புக் கணக்குப் போட்டால் அது பெரும் விளங்காத்தனம்.

இரு சாரார் வன்செயல்களில் ஈடுபட்டு மோதும் போது சமரசம் சாத்தியமில்லை. அந்த மோதல் நிறுத்தப்பட்டால் மட்டுமே சமாதானத்துக்கு உளமாரப் பேசமுடியும்.

அதனுல் தான் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு இராணுவ நடவடிக்கைகள் முற்ருக நிறுத்தப்பட்டாக வேண்டும் என்று இந்தியா சொல்கிறது. அதுவே நியாயமும் ஆகும்.

பேச்சுவார்த்தைக்கு முன்னர் உயிர்ப்பலிகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் இலங்கை அரசுக்கு ஆர்வம் இருக்கும் என ஊகிக்கப்பட்டது. தெற்கில் அடுததடுத்துக் குண்டுவெடிப்புக்கள் நடந்த பின்னராவது அது குறித்து அரசு அக்கறை காட்டும் என்று எண்ணப்பட்டது. ஆனல் அதனைப் பற்றி அரசு இன்னும் நினைக்கவில்லை என்பது இப்போது தெரியவருகிறது.

வடக்கு, கிழக்கில் படை பலத்தையும் ஆயுத பலத்தையும் அரசாங்கம் நாளாந்தம் பெருக்குகிறது. இராணுவ முகாம்களுக்கு அருகில் நிறுவிய மினிமுகாம்களைக் கூட பலப்படுத்தி வருகிறது. கடந்த சில தினங்களாக அது தீவிரப் படுத்தப்பட்டும் உள்ளது.

தெற்கிலிருந்து வடக்கே வரும் படைகளையும், ஆயுதங்களையும் பார்க்கும்போது இது வரை இல்லாத பெரும் இராணுவ நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளப் போகிறதோ என்ற ஐயமேற்படுகிறது.

இவ்வாறுக இராணுவ ஆயத்தங்களைச் செய்து கொண்டு போர்நிறுத்தம் குறித்து தமிழ்ப் போராளிகளுடன் பேசுவதற்கு இட்து சாரிகளைத் தூதுவிடுவதற்கும் அரசாங்கம் ஏற்பாடுசெய்து வருகிறது.

இது உலகத்தை ஏமாற்றும் ஒரு செயல். இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை முன்வைத்தால் மட்டுமே சமாதானத்தைக் காணமுடியும்.

அதற்கு முன்தேவையாக இராணுவ நடவடிக்கைகளைத் தமிழ்ப் பகுதிகளில் நிறுத்த வேண்டும் ஆனல் இப்போது அதற்கு நேர் மாருக அல்லவா வடக்கு, கிழக்கில் இராணுவ பலம் இரட்டிக்கப்படுகிறது?

எனவே தீர்வு, சமாதானம் எதுவும் இப்போதைக்குச் சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது இந்தியா மட்டுமல்ல, ரஷ்யாவும் இதனைப் புரிந்து கொள்ளாமலா இருக்கும்?

எதற்கும், இராணுவ நடவடிக்கைகளில் இருந்து தம்மைத்தாமே பாதுகாப்பதற்கு தமிழ் மக்கள் தயாராக வேண்டிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அல்லவா?

# எமது நாட்டின் பாதுகாப்பு உறுதியானது

## கங்கை நதி செயற்பாட்டு திட்ட வைபவத்தில் ராஜீவ்

காசி, ஜூன் 14

எமது நாட்டின் பாதுகாப்பு மிகவும் உறுதியானது. அந்நிய நாடு எதுவும் எம்மை எதுவுமே செய்ய முடியாது. ஆனல் எமது ஒற்றுமையும், கட்டுக்கோப்பும் சீர் குலையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவை சீர்குலையும் போது அந்நிய நாடுகளுக்கு சந்தர்ப்பமாகிவிடும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மேற் சண்டவாறு கூறினர்.

கங்கை நதியின் செயற்பாட்டுத் திட்டத்தை காசியில் அங்குரார்ப்பணம் செய்து வைத்து அவர் உரையாற்றினர்.

கங்கை நதி எமது நாட்டின் கலை கலாசாரத்திற்கு ஓர் உன்னதமான நினைவுச் சின்னம்.

எமது சரித்திரத்துடன் இது இரண்டறக் கலந்துள்ளது. எமது பாரபரியத்தை நன்கு பரிணமிக்கின்றது.

நாட்டினது சகோதரத்துவத்தையும் தியாகத்தையும் கங்கை நதி பிரதிபலிக்கின்றது.

இந்தியர் ஒவ்வொருவனும் தான் இந்திய பிரஜை என்ற உணர்வுடன் வாழவேண்டும்.

அதனுல் அந்நிய நாடுகளின் ஆதிக்க அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது அவற்றிற்கே நாம் ஒரு சவாலாக அமைவோம்.

இப்படி ராஜீவ் காந்தி கூறினர். (இ-ஓ)

### உயர் மட்ட ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 14

சண்டிகார் நகரை பஞ்சாப்புக்கு கையளிப்பது சம்பந்தமான உடன்பாட்டை அமுல் நடத்துவது சம்பந்தமாக உயர் மட்ட ஆலோசனைகள் புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ளன.

வெளி உலகில்

## அவசரகாலச் சட்டத்தை அடுத்து தென் ஆபிரிக்காவில் பலர் கைது

ஜோஹன்னர்ஸ்பர்க், ஜூன் 14

தென் ஆபிரிக்காவில் அவசரகாலச் சட்டம் வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது. அதனை அடுத்து ஏராளமானேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனதிபதி பி டபிள்யு போத்தா அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

கறுப்பு இன மக்களின் சுவட்டோ கிளர்ச்சியின் பத்தாவது ஆண்டு நினைவு தினம் கொண்டாடப்பட இன்னும் இரண்டு தினங்கள் இருக்கையிலேயே தென் ஆபிரிக்க இனவெறி அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தது

கறுப்பு இனத் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகியோரை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர் (இ-எ)

### ஈரானில் ஆபாச ஆடை விற்பனை தடை

தெஹ்ரான், ஜூன், 14

மேற்கு உலக நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் ஆடைகளை விற்பனை செய்யும் நூற்றுக்கணக்கான நிலையங்கள் ஈரானில் மூடப்பட்டு வருகின்றன

மேற்கு நாடுகளின் புது நாரிகமான கிழிந்த— தளர்வான— சாயம் மங்கிய ஆடைகளின் மோகம் தெஹ்ரானில் பரவாமல் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில ஆடைகளில் மிகவும் ஆபாசமான வார்த்தைகளும் பொறிக்கப்பட்டுள்ளனவாம்.

இவை இஸ்லாமிய கலாசாரத்தை மிகவும் பாதிப்பதாக அமையும் என ஈரான் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார். (இ-ஓ)

## பலஸ்தீன அகதி முகாம்களில் ஊரடங்கு உத்தரவு

அம்மான், ஜூன் 14

ஜோர்தானின் மேற்குக் கரையில் நிலைகொண்டிருக்கும் இஸ்ரவேல் துருப்புக்கள் தமக்கு அண்மையுள்ள பலஸ்தீன அகதிகள் முகாம்கள் மீது ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தனர்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த அகதிகள் முகாம்களிலிருந்து பெருமளவில் உதவிகள் கிடைப்பதாக இஸ்ரவேல் தெரிவிக்கிறது.

இதனல் இஸ்ரவேல் இராணுவம் அகதி முகாம்களுக்குள் பலவந்தமாகப் பிரவேசிப்பதுடன் வீடுவீடாக சோதனைகளையும் மேற்கொண்டு வருகிறது.

சந்தேகத்தில் நூற்றுக்கணக்கானேரைக் கைது செய்து இஸ்ரவேல் படைகள் கொன்று குவித்து வருகின்றன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (இ-ஓ)

### ஜோர்தான் மன்னர் நம்பிக்கை

பாரிஸ், ஜூன் 14

சிரியாவிற்கும் — ஈராக்கிற்கும் இடையில் நல் உறவை மீண்டும் ஏற்படுத்துவதற்கு எடுத்து வரும் முயற்சிகள் நல்ல பலனை அளிக்கும் என எதிர்பார்ப்பதாக ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன் தெரிவித்தார்.

தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு ஜோர்தான் மன்னர் பாரிஸ் வந்துள்ளார்.

பத்திரிகையாளரின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்

(இ-ஓ)

### பிலிப்பீன்ஸ் 23 பேர் பலி

மணிலா, ஜூன் 14

கம்யூனிஸ்ட் கெரில்லாத் தாக்குதல்களால் பிலிப்பீன்ஸ் நாட்டிலுள்ள இரு சிறிய கிராமங்களில் ஆகக் குறைந்தது 23 பேர் இறந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

(இ-ஓ)

### பிரிட்டிஷ் நடிகை மரணம்

லண்டன் ஜூன் 14

கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக பிரிட்டிஷ் திரையுலகிலும், நாடகங்களிலும் பிரகாசித்துக் கொண்டிருந்த நடிகை அனு நியேஜ்லி மாரடைப்பால் தமது 81 ஆவது வயதில் மரணமானர். (இ-ஓ)

## பெண்ஷன் பற்றி அரச அதிபர் விளக்கம்

இந்த அறிக்கையின் சுருக்கம் 12 ஆம் திகதிய உதயனில் சுருக்கமாக வெளிவந்திருந்தது. பெண்ஷன் எடுப்போரின் நன்மை கருதி இதனை இன்று முழுமையாகப் பிரசுரிக்கிறேம்.

கம்பியூட்டர் முறையில் பென்ஷன் வழங்கும் திட்டம் ஜூலை மாதத்தில் இருந்து அட்டவணைப்படி நடைபெறும்.

ஜூன் மாத பென்ஷன் வழங்கும் திகதிகள் காலக்கிரமத்தில் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்

இத்தகவல்களை யாழ் அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம், பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிருர்.

கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்ட ஜூன் மாத பென்ஷனுக்கான பட்டியல்கள், பற்றுச் சீட்டுக்கள் லொறியுடன் பரந்தனில் ஜூன் 4 ஆம் திகதி எரிந்துபோனது தொடர்பாக, அரச அதிபர் இந்த அறிக்கையை விடுத்திருக்கிருர்.

அறிக்கையில் அரச அதிபர் மேலும் கூறியிருப்பதாவது;

கம்பியூட்டர் மூலம் பென்ஷன் வழங்கும் திட்டம் ஜனவரியில் அமுலுக்கு வர இருந்தது. நாட்டு நிலைமை காரணமாக அது சாத்தியப்படவில்லை.

பல கஷ்டங்களுக்கு மத்தியில் இடைவிடாது எடுத்து வந்த முயற்சியின்பயனக ஜூன் மாதத்தில் இருந்து புதிய பென்ஷன் வழங்கும் திட்டத்தை அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கு இணங்க கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டபோது பரந்தனில் ஏற்பட்ட அசம்பாவிதத்தில் எரிந்து விட்டன.

உணவு முத்திரைகள் படிவங்கள், உடைமைகளும் எரிந்து சாம்பலாகின. அதுமட்டுமல்லாமல் உயிரிழப்புகளும் ஏற்பட்டன

துரதிருஷ்டவசமான இச்சம்பவங்களினுல் ஜூன் மாத பென்ஷனைக் குறிப்பிட்ட திகதிகளில் வழங்குவதற்கு இயலாது உள்ளது.

எரிந்த கம்பியூட்டர் பத்திரங்களை ஈடு செய்யும் வகையில் மேலதிக பிரதிகளைப் பெறுவதற்கு அதற்குரியவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளேன்

யாழ் மாவட்ட பென்ஷன் கொடுப்பனவு சம்பந்தமான தரவுகள் கம்பியூட்டர் பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்டு மிகவும் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

ஜூன் மாதத்துக்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலதிக பென்ஷன் தஸ்தாவேஜுகளும் பெற வேண்டியுள்ளது.

இவற்றைப் பெறுவதற்குச் சில நாட்கள் செல்லும்.

புதிய திட்டத்தின் படி வங்கி மூலம் பென்ஷன் பெறுவோருக்கான பற்றுச் சீட்டு அவர்களின் தனிப்பட்ட விலாசத்துக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

அவர்கள் அப்பத்திரத்தை முறைப்படி பூர்த்தி செய்து தத்தமது வங்கிகளில் ஒப்படைக்கவேண்டும்

அஞ்சல் அலுவலகம், கச்சேரிக் கிளை மூலம் பென்ஷன் பெறுபவருக்கு அப்பற்றுச் சீட்டுகள் நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

கம்பியூட்டரில் அச்சிடப்பட்ட பற்றுச் சீட்டில் பென்ஷன் பெறுபவரின் பெயர், விலாசம், பென்ஷன் இலக்கம், வங்கிக் கணக்கு இலக்கம் முதலியன இருக்கும்.

ஜூன் மாதத்துக்கான கம்பியூட்டரில் தயாரிக்கப்பட்ட பற்றுச் சீட்டுகள் மட்டும் பென்ஷன் காரருக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படமாட்டா.

அப்படி அனுப்புவது தாமதத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தினுல், அவை அந்த அந்தப் பகுதி வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கப்படும்

ஆகவே பென்ஷன் காரர்கள் ஜூன் மாதப் பற்றுச் சீட்டை வங்கி முகாமையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

இப்படி அரச அதிபர் தனது அறிக்கையில் கூறியிருக்கிருர்.


(இ-எ)

# மலை போன்ற கஷ்டங்களே தேவனண்டை ஓடச் செய்யும்

பாலைவனமாம் இப்பாரினிலே கைவிடப்பட்டவர்களாக உதவியற்றவர்களாக, தனிமையிலே தவித்துக் கொண்டிருக்கின்றீர்களா?

கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றீர்களா?

கடந்த காலத்தை நோக்கும் போது, கடந்



தவை அனைத்தும் என்னைக் கலங்கச் செய்து விட்டன. இனியும் எனக்கு விடிவும் விமோசனமும் ஆறுதலும் உண்டு என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்றீர்களா?

நண்பர்களே உங்களுக்கு ஆறுதலளித்து, ஆனந்தமுண்டாக்கி பரவசப்படுத்த பரத்திலிருந்து பரமபிதா அனுப்பும் செய்தி என்னவென்றல் "கர்த்தராகிய இயேசுவாகிய நான் உங்களை விசாரிப்பேன். வருடத்தின் தொடக்கம் முதல் வருடத்தின் முடிவுமட்டும் கர்த்தரின் கண் உங்கள் மேல் இருக்கும்" என்பதேயாகும்.

உங்களுக்குப் பாவம் மீறமுடியாதெனப் பயமா?

கோரப்பிசாசு கொடுமை செய்யும் எனக் குழறலா? தீராத வியாதியினுல் ஓயாத உபத்திரவமா கண்ணீரா? கஷ்டமா? கலக்கமா? வேதனையா; துன்பமா? வியாகுலமா? கணவனல் மனைவியால், பிள்ளைகளால்... தொல்லையா? வாழ்க்கையே வரண்ட வனந்தரம் போல் தோன்றுகின்றதா?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் மாத்திரம் விசுவாசம் உள்ளவர்களாய் இருங்கள். கலங்கவேண்டாம். உங்கள் மீதுதான் கர்த்தராகிய இயேசுவின் கண்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

சிறுமைப்படுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டிருப்போர்களே கர்த்தர் உங்களை விசாரிக்கப்போகின்ருர், உங்களுக்குத்தான் வற்ருத குறைவுபடாத, நிலைத்து நித்தியமாக நிற்கக்கூடிய ஆசிர்வாதங்களை அள்ளித்தரப் போகின்ருர் நீங்கள் தான் மகிழ்ச்சி அடையப் போகின்றீர்கள் இது உங்கள் உள்ளங்களை—

ஞானக்கதிர்

ஆத்துமாவைப் பரவசப் படுத்தட்டும்.

வாழ்க்கையானது ஒரு சமபூமியன்று. ஒரே சம வெளியாய் இருந்தால் நாம் சலிப்புடைந்து விடுவோம். மலை போன்ற கஷ்டங்களே நம்மை தேவனண்டை ஓடச் செய்து, அவரில் சார்ந்திருக்கப்பண்ணி மழை போன்ற ஆசிர்வாதங்களை கொண்டுவர முடியும். தேவனுடைய வார்த்தையும் 'ஏற்ற காலத்தில் மழையைப் பெய்யப்பண்ணுவேன். ஆசிர்வாதமான மழை பெய்யும் (ஏசே 34: 26) என்பதையே சொல்லுகிறது.

இன்று உங்கள் கால நிலை எப்படிப்பட்டதாக இருக்கின்றது. வரட்சியான காலமா? வாடி வதங்கி இருக்கின்றீர்களா? இதுவே மழை பெய்யவேண்டிய ஏற்ற காலம்.

வாழ்க்கை என்ற உங்கள் வானத்திலே கரிய மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்றதா? கார் முகில்கள் படருகின்றனவா? இருள் சூழ்ந்து கொண்டிருக்கின்றதா? தேவனுக்கு ஸ்தோத்திரம் இதுவேதான் ஆசிர்வாதமான மழையின் காலம். இதுதான் ஏற்ற காலம் தேவன் உங்கள் மீது ஆசிர்வாதமான மழையைப் பொழியப் பண்ணுவார். ஆசிர்வாத மான மழை உங்கள்மீது பெய்யும் (இ)

சமய சந்நிதிகளில்

### துர்க்கையம்மன் உற்சவங்கள்

சாவகச்சேரி, ஜூன் 15

சாவகச்சேரி அருள்மிகு துர்க்கையம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவங்கள் இம்மாதம் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று ஆரம்பமாகின்றன.

26 ஆம் திகதி வரை தொடர்ந்து பத்து தினங்களுக்கு உற்சவங்கள் நடைபெறும்.

இறுதி நாளன்று கும்பாபிஷேக தினமாகிய மணவாளக் கோலத்தை முன்னிட்டு பகல் அஷ்டோத்ரசத சங்காபிஷேகமும் மாலை திருவூஞ்சல் உற்சவமும் இடம்பெற இருக்கின்றன.

விழாக்காலக் கிரியைகளை சிவாகம ஞானசாகரம் சிவஸ்ரீ இ. சோமசுந்தரக் குருக்களும் சிவஸ்ரீ. க. பரராஜசேகரக் குருக்களும் இணைந்து நடத்துவார்கள்.

(இ - 31)

பொய்யாமொழி



குறள்

அஃகாமை செல்வத்திற்கு யாதெனில் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

பொருள்

ஒருவனுடைய செல்வத்திற்குக் குறைவு நேராதிருக்க வழி எது [illegible] பிறனுடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலாகும்.

### கல்வி அலுவலகம் பளையில்

யாழ்ப்பாணம், ஜூன். 15

கிளிநொச்சி மாவட்டக் கல்வி அலுவலகம் தற்காலிகமாக பளை மகாவித்தியாலயத்தில் இயங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக ஊழியர்களை அங்கு சமுகமளிக்கும்படி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனப். எம். எம். மன்சூர் கேட்டுள்ளார். (இ-எ)

### சென்பற்றிக்ஸ் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன். 15

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி வருடாந்தப்பரிசளிப்பு விழா ஜூன் 18 ஆம் திகதி நடைபெறும்

திருகோணமலை— மட்டக்களப்பு ஆயர் அதிவந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்ப்பாணம் ஆயர் அதிவந்தனைக்குரிய பி. தியோகுப்பிள்ளை தலைமை வகிப்பார்.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A Very Special Offer

Complete I.C.M.A in four years
WITHOUT G C E. O/L & A/L
For Consultation and Course Guidance

Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
31, MAIN STREET, JAFFNA.
T'Phone 24201

# உதயன்

15 — 06 — 1986 ஞாயிற்றுக்கிழமை

LONDON EXAMS

I.C.M.A - A — A.A.T. (Inter)
I.C.M.A. - B — I.A.B. (Foundation)
I.D.P.M, - I — I.A.B. (Inter)
A.A.T - (Prelim) — I.A-B- (Final)

Classes by qualified and experianced panel of ! ecturers commence from 7th June 86

Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
31, MAIN STREET, JAFFNA
T'Phone no: 2420

# ஆனையிறவில் லொறிகள் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் சகல லொறிகளும் ஆனையிறவு தடைமுகாமில் வைத்து கடுமையான சோதனைக்குள்ளாக்கப் படுகின்றன.

பல லொறிகள் முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளன

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:

வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் சகல லொறிகளும் ஆனையிறவு பாதுகாப்பு படையினரால் பூரண சோதனைக் குட்படுத்தப்படுகின்றன.

இதனை அடுத்து பல லொறிகள் ஆனையிறவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

இந்தத் தொந்தரவுகளால் ஆனையிறவுக்கும் இயக்கச்சிக்கும் இடையில் பல லொறிகள் இடத்துக்கிடம் தரித்து நிற்கக் காணப்பட்டன. (இ-10)

## ஊர்காவல் படைக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 15

அத்துமீறிய செயல்களில் ஊர்காவல்படையினர் ஈடுபடக்கூடாது. ஈடுபடுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும்

இப்படி கூட்டுத் தளபதி சிறில் ரணதுங்க. சகல ஆயுதப்படை முகாம்களுக்கும் அறிவித்திருக்கிறார். (இ-எ-21)

## பஸ் சேவை ஸ்தம்பிதம்

கொழும்பு, ஜூன் 15

கடந்த புதன்கிழமை இ. போ. ச பஸ் ஒன்று கடத்தப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் உன்னிச்சை—புல்லுமலை பஸ் சேவை முற்றாக ஸ்தம்பித்து விட்டது.

அப்பகுதியில் இப்போது பஸ்சேவை முற்றாக நிறுத்தப்பட்டு விட்டது. (இ - எ)

# இந்திய அதிகாரிகள் முன்னிலையில்

## போராளிகள் வள்ளங்களில் ஆயுதம் ஏற்றுகிறார்களாம்

### "டைம்" தகவல்

நியூயோர்க், ஜூன் 14

தமிழ் நாட்டில் உள்ள தமிழ்ப் போராளிகளின் பயிற்சி முகாம்களை இந்தியா மூடவில்லை. அது மட்டுமல்ல, போராளிகள் பாக்குநீரிணை ஊடாக இலங்கைக்குக் கொண்டு செல்வதற்காக வள்ளங்களில் ஆயுதங்களை ஏற்றுவதை இந்திய அதிகாரிகள் பார்த்துக்கொண்டும் நிற்கிறார்கள்.

இப்படி அமெரிக்காவின் பிரபல சஞ்சிகையான 'டைம்' செய்தி வெளியிட்டுள்ளது.

6 பக்கங்களில் இது சம்பந்தமான படங்கள், கட்டுரைகளை 'டைம்' வெளியிட்டுள்ளது

சென்னையைத் தலைமை அலுவலகமாகக்கொண்டு 5 பெரிய போராளிக் குழுக்கள் இயங்குகின்றன.

தமிழ்நாட்டில் மட்டும் 39 போராளிகளின் முகாம்கள் உள்ளன. 3,300 வரையிலான போராளிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்

போராளிகளின் முகாம்களை இந்தியா மூடவில்லை. போராளிக் குழுக்கள் குறித்து இந்தியக் குழுக்கள் தீவிரக் கண்காணிப்புச் செலுத்துகின்றன.

இலங்கைக்குக் கொண்டு போவதற்காகப் போராளிகள் வள்ளங்களில் ஆயுதங்கள் ஏற்றுவதை இந்தியக் கரையில் நின்று இந்திய அதிகாரிகள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்திய அதிகாரிகளின் அங்கீகாரமில்லாமல் போராளிகளினால் ஏற்றப்படும் ஆயுதங்களை மட்டும் தான் இந்திய அதிகாரிகள் பறிமுதல் செய்கிறார்கள்.

பேச்சுக்களில் கலந்து கொள்ள போராளிகளை நிர்ப்பந்திப்பதற்கு இந்தியா ஆயுதங்களை வழங்குவதில் கட்டுப்பாடும் விதிக்கிறது.

அதே மாதிரி இலங்கை அரசின் மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துமுகமாக தமிழ் நாட்டில் போராளிகளின் முகாம்களையும் அனுமதித்துள்ளது.

இப்படி 'டைம்' சஞ்சிகை கூறியுள்ளது (இ-எ)

## இரு தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞரான த. சாம்பசிவத்தின் பெற்றோரே தம்பிராசா தம்பதிகள்.

கொழும்பில் இருந்து தனியசர் பஸ்ஸில் வந்து கொண்டிருந்த தோமஸ் பீட்டர் என்பவர் ஊர்காவல்படையினரால் பஸ்ஸில் இருந்து இறக்கிக்கொண்டு செல்லப் பட்டார். அதன்பின்னர் அவரைப்பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

பிரிமா ஆலையில் பணியாற்றிவந்த ரோய் என்ற பெயருடைய அதிகாரியும் காரில் வந்து கொண்டிருக்கையில் 4ஆம் கட்டைச் சந்தியில் வைத்து ஊர்காவல்படையினரால் இறக்கி அழைத்துச் செல்லப்பட்டார். அதன்பின்னர் அவரைப் பற்றிய தகவலும் இல்லை.

இவர்களைவிட அந்த இடத்தில் வைத்து ஊர்காவல் படையினரால் அழைத்துச் செல்லப் பட்ட சுமார் 25 தமிழர்கள் பற்றியும் எதுவித தகவலும் இதுவரை வெளிவரவில்லை என்று சொல்லப்படுகிறது. (இ-எ-150)

## கொழும்பில் இந்திய தூதர் மறுப்பு

கொழும்பு, ஜூன் 15

இலங்கைக்கு போராளிகள் ஆயுதங்கள் ஏற்றிச் செல்வதை இந்திய அதிகாரிகள் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள் என்று அமெரிக்க 'டைம்' சஞ்சிகை வெளியிட்ட செய்தி சரியானது அல்ல. கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு.ஜே. என். டிக்ஸிற் இப்படிச் சொன்னார்.

அது சரியான வர்ணனை அல்ல என்றே நான் எண்ணுகிறேன். வெளிநாட்டுச் சஞ்சிகை ஒன்றில் வெளியாகும் பொதுவான அறிக்கைகள் பற்றி நான் கருத்து வெளியிட விரும்பவில்லை.

டிக்ஸிற் மேற்கண்டவாறும் சொன்னார். ( -எ)

## கிளிநொச்சி....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தும் இருக்கலாம் என அஞ்சப்பட்டது.

புலிகளின் தாக்குதலை அடுத்து முகாமிற்குத் திரும்பிய சிப்பாய்கள் 'ஷெல்' தாக்குதலை மேற்கொண்டனர். இதனாலே இளைஞர் ஒருவர் காயமடைந்தார் என்றும் சொல்லப்பட்டது.

இதே தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஹெலிகொப்டரில் இருந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அறிய வந்தது.

இச் சம்பவத்தையடுத்து கொழும்பில் இருந்து வந்த சகல வாகனங்களும் புளியங்குளம், நெடுங்கேணி, பரந்தன் பாதையூடாக யாழ்ப்பாணம் வந்தடைந்தன. (அ-10)

## வல்வெட்டித்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.

அப்பகுதியில் உள்ள வல்வை சிவன் கோயில், வல்வை அம்மன் கோயில் வல்வை முகாமிற்கு அண்மையில் உள்ள சிவன் கோயில், ஆதி வைரவர் கோயில் ஆகியவற்றில் கடந்த ஆறு தினங்களாக பூஜை நடைபெறவில்லை (இ-70)

## இலங்கையின் விளக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வார்.

அதுதப்பினுல் செவ்வாய்க்கிழமை நிச்சயம் புறப்படுவார் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ஜெயவர்த்தன, நேற்று திரு. பேர்னாட் திலகரத்தினாவுடன் விரிவான பேச்சுக்களை நடத்தினார்.

### பின்னணி

கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி தொடக்கம் மே மாதம் நான்காம் திகதிவரைகொழும்பில் தங்கி, இலங்கை அரசாங்கத்துடன்இந்தியாவிலிருந்து வந்த சிதம்பரம் குழு பேச்சுக்களை நடத்தியது.

அந்தக்குழுவிடம்இனப் பிரச்சினைக்கான இலங்கை அரசின் யோசனை எழுத்துமூலம் கையளிக்கப்பட்டது.

பிரஸ்தாப யோசனைகளைப் படித்த இந்திய அரசு, பல விளக்கங்களும் வியாக்கியானங்களும் தேவைப்படுவதாக திரு திலகரத்தினவை அழைத்துக் கூறியது.

ஆனால் பேச்சுவார்த்தை ஒன்று நடக்கும் பட்சத்தில் மட்டுமே தனது விளக்கங்கள், வியாக்கியானங்களைத் தரமுடியும் என்று இலங்கை அரசு அறிவித்திருந்தது.

அதைத் தொடர்ந்து விளக்கங்கள், வியாக்கியானங்கள் தரப்படும் வரை தமிழர்அமைப்புகளுடன் தாம் எதையும் பேசமாட்டோம் என்று இந்தியத் தரப்பினர் அறிவித்திருந்தனர்

அண்மையில் புதுடில்லி சென்ற கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு ஜே என். டிக்ஸிற், இங்கு வந்ததும், மேலிடத்தின் பணிப்பின் பேரில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசினார்.

பிரதமர் திரு ராஜீவ் காந்தியின் கடிதம் ஒன்றையும் கையளித்திருந்தார்.

அதைத் தொடர்ந்தே விளக்கங்கள் புதுவியாக்கியானங்கள் தயார் செய்யப்பட்டதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

நேற்றுக்கூட சென்னையில் கருத்து வெளியிட்ட இணையமைச்சர் திரு பா. சிதம்பரம் பின்வருமாறு கூறியிருந்தார்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாக இலங்கை அரசிடமிருந்து விரிவான விளக்கம் கிடைத்த பின்னரே இந்தியாவின் மத்தியஸ்த முயற்சி தொடரும். (அ-எ-2)

## மூதூர்...

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

40 குடும்பங்கள் தஞ்சம் புகுந்தன.

பீதி காரணமாகவே மூதூர்த் தமிழ் அகதிகள் மட்டக்களப்புக்குச் செல்கின்றனர் என்று தெரிகிறது. (எ-21

## அடுத்த சில...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பில் இருந்து வந்த பென்ஷன் பத்திரங்கள் கிளிநொச்சியில் எரியுண்டதை அடுத்து பென்ஷன் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

எனினும் புதிய பென்ஷன் பத்திரங்கள் கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப் பட்டு யாழ் செயலகத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளன. (இ-10)

## விஸ்தாரம்

என்ன முரளியாரே! வாரும், வலு குஷியாக இருக்கிறீர். அப்படி என்ன சந்தோஷமான காரியம்?

அட மட்டக்களப்புக்கு ரெலிபோன் பேசினனியோ? அது ஏதோ பெரிய சாதனையாய்த் தெரிஞ்சு தான் சந்தோஷப்படுறீயோ! சரிதான் இந்தக் காலத்திலை ரெலிபோன் சரியா வேலை செய்து பேசிறதும் பெரிய காரியம் தான்.

கிளிநொச்சியிலை இந்த மாதம் நாலாம் திகதி தொடங்கின யுத்தத்திலை பன்னிரண்டாம் திகதி வரை ரெலிபோன் சேவையே இல்லாமப் போச்சு.

அது சம்பந்தமா நாலு மூண்டு விஷயங்கள் எனக்கு ஒரு சமிசம்.

யாழ்ப்பாணத்திலை மாதிரி கிளிநொச்சியிலையும் அரசாங்கத்தின்ரை நிலை கஷ்டமாய்ப் போச்சு. 'அவையள், இருந்த இடத்தை விட்டு வெளியே வர முடியாத படி எங்கடை பெடியள் செய்து போட்டினம். அந்த விஷயம் வெளியாலை போகக்கூடாது என்பது ஒண்டு.

ரெலிபோன் தானே வெளியாலை செய்தி சொல்லுறது அதைத் தடுத்துவிட்டா தங்கடை நிலைமையை அடுத்த பக்கத்தாலை காட்டலாம் எண்டு நினைச்சது இன்னொண்டு.

அடுத்தது ரெலிபோன் கோபுரத்தை உடைச்சதாலை செய்தி வெளியாலை போகாது என்ட துணிவோடை மண்டைதீவுப் பயங்கரம் ஒன்றைச் செய்யலாம் எண்டு அப்பவே 'பிளான்' பண்ணியிருப்பினம் போலை.

நாலாவது — ரெலிபோன் மற்றும் போக்குவரத்துகளைத் துண்டிச்சு விட்டா யாழ்ப்பாணக் குடாநாட்டை — ஒரு தனி நாடாகப் பார்க்கலாம் அது எப்பிடி இருக்கும் எண்டு ஒரு 'ரயல்' போட்டு பாக்க யோசிச்சினமோ என்னவோ ...!

இரண்டொரு நாளா, யாழ்ப்பாணத்திலை இருந்து, கிளிநொச்சிக்கு அப்பாலை வாகனம் போக்குவரத்து நடக்குது. ஆனால் வாகனகாரருக்குத்தான் பெரிய தர்ம சங்கடமாம்.

நெருப்புக் கொள்ளியுக்கை நடுவிலை எத்துப் பட்ட எறும்பு மாதிரி. கண்டிரோட்டாலை நேரே போகவேண்டாம் எண்டு தம்பிமார் சொல்லுகினமாம். அதுவும் சரிதான். ஏன், வினையை விலைக்கு வாங்குவான் எண்டு சுத்திப்போவோம் எண்டால் ஆனையிறவிலை நிக்கிற இராமண்ணைமார் நேரைதான் போகவேணும் எண்டு கட்டாய படுத்தினமாம். அப்பிடி இல்லாவிட்டால் ஏதேதோ செய்வோம் எண்டு எச்சரிக்கினமாம். வாகனக்காரர்பாடு பெரியகஷ்டம் எண்டது ஒருபுறம் உயிரையும் பயணம் வைச்சுத்தானே பயணம் நடத்துகினம்.

குடாநாட்டுக்குள்ளை இருந்த இரையிலை சாப்பிடுற சில பேருக்கு இந்தக் கஷ்டங்கள் ஒண்டும் விளங்காது பாருங்கோ!.

இகொண்டோடி

## விளையாட்டரங்கு

17 வயதுப் பிரிவு

### யாழ் இந்து வெற்றி

#### திலீபனின் சிறப்பு ஆட்டம்

அலுவலக விளையாட்டுச் செய்தியாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கெதிரான 17 வயதுக் குட்பட்ட கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

நேற்று யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யூனியன் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி 122 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது எஸ் குலேந்திரன் 2 சிச்சர், 4 பவுண்டரிகள் அடங்கிய 47 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும், கேதீசன் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பி. பிரபானந்தன், எஸ் சுரேஸ், ஜெ ஜெயதீபன் எஸ். திலீபன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துக்கல்லூரி அணி தனது விக்கெட்டுக்களை முதலில் மளமளவென இழந்த போதும் கே. புவனேந்திரன், டி. பிரபானந்தன் ஆகியோருடன் இணைந்தாடிய எஸ். திலீபனின் அபார ஆட்டத்தினால் இந்த அணியின் கை ஓங்கியது.

இந்த அணி இறுதியில் 7 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய எஸ். திலீபன் 13 பவுண்டரிகள் அடங்கிய 90 ஓட்டங்களையும் பி பிரபானந்தன் ஒரு சிச்சரையும் 10 பவுண்டரிகளையும் மின்னலென அடித்து 54 ஓட்டங்களையும், கே. புவனேந்திரன் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

எட்றிச் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யூனியன் அணி இறுதியாக வழங்கப்பட்ட 8.3. ஓவர்களில் 1 விக்கெட்டை இழந்து 15 ஓட்டங்களைப் பெற்றது. (இ-7)

### மத்திய கல்லூரி வெற்றிபெற்றது

#### முதல் செஞ்சரியை விக்கி பெற்றார்

யாழ்ப்பாணம், ஜூன்15

17 வயதுக்கு உட்பட்ட கல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் பருவகாலத்தின் முதலாவது செஞ்சரியை யாழ் மத்திய கல்லூரி விக்னேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிராக யாழ் மத்திய கல்லூரி மோதிய போதே இந்த செஞ்சரி பெறப்பட்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது

அபாரமாக ஆடிய விக்னேஸ்வரன் 131 ஓட்டங்களைப் பெற்றார்.

கே. குகராஜா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 60 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எஸ். கோகுலன் 32 ஓட்டங்களைப் பெற்றார். எம் முரளிதரன் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்காக மீண்டும் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி ஆட்ட நேர முடிவின்போது 7 விக்கெட்டுகளை இழந்து 16 ஓட்டங்களைப் பெற்றது

கே குகராஜா ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும், கணேஷ்குமார் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

ரி. ரமேஸ். முரளிதரன் ஆகியோர் முறையே 3, 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (இ-7)

### சிக்கோ டிஸ்கோ மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம் ஜூன் 15

சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகத்தினர் தமது 5 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு 9 அங்கத்தவரை கொண்டதும் 15 ஓவரை கொண்டதுமான மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்றை நடத்தவுள்ளனர்.

விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித்தினம் 27-06-86 ஆகும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி செயலாளர் ரி. சின்னராசா குடாரை கந்த ரோடை சுன்னாகம். (இ-10)

### பாமதி இல்லம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

வெற்றி பெற்ற இல்லங்களின் விவரம் வருமாறு:-

283 புள்ளிகளைப் பெற்று பாமதி இல்லம் முதலாவது இடத்தையும், 241 புள்ளிகளைப் பெற்று உமாபதி இல்லம் இரண்டாம் இடத்தையும் 136 புள்ளிகளைப் பெற்று காந்தி இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. வே சிற்சபேசன், அமரர் செ. வேலுப்பிள்ளை ஞாபகார்த்த வெள்ளிக் கிண்ணத்தை வழங்கினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இளைப்பாறிய வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். சபாபதிப்பிள்ளை பரிசில்களை வழங்கினார். (இ-10)

## யாருடையது?

மூக்குக்கண்ணாடி ஒன்று இவ்வாரம் அளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவற விட்டோர் நேரில் வரவும்.

டாக்டர் எம். தேவமதுரம், 569, பீச் ரோட், குருநகர், யாழ்ப்பாணம்.

## கொழும்பு லைன் சரி ஆனால் .....

"எத்தனையோ நாட்களாய்ப் பிழைபட்டுக் கிடந்த கொழும்பு லைன்களை யாழ்ப்பாணம் ரெலிக்கொம்யூனிக்கேசன் டிப்பாட்மென்ற் ஆட்கள், கிளிநொச்சிக்கு அங்காலை எங்கேயோ போய் சரிப் படுத்திப்போட்டு வந்திட்டினம். தங்கடை உயிரையும் பாராமல் அங்காலை போயிட்டு சுகமாய்த் திரும்பி வந்திட்டுதுகள் அதுகள் நல்லாயிருக்க வேணும். இப்ப கொழும்பு லைன் சரி. ஆனால் கொழும்பு எடுக்கிறது மெத்தக் கஷ்டமாயல்லோ இருக்குது. நெடுகலும் ரெலிபோனுக்குப் பக்கத்திலை இருந்து சுழட்டிக் கொண்டிருக்கேலுமே. ரெலிகுளோப்பிற்குப் போய் அங்கை கொழும்பு எடுக்க இலேசாய் இருக்குது. ஏன் எண்டு கேட்கயில்லை! அங்கை ஆறு லைனிலை ஆறுபேர் இதே அலுவலாயே இருக்கினம். சுறுசுறுப்பான நல்ல பொறுமைசாலியான பிள்ளையள் அதோடை அவையின்ரை ரெலிபோனிலை திருப்பித் திருப்பி நம்பரை எடுக்கிறது கெதிகெதியாய் இலேசாச் செய்யலாம் போலை இருக்கு; கொழும்பு 'டக்' கெண்டு கிடைச்சிடுது. கொழும்பு எடுத்துப் போட்டால் பிறநாடு எடுக்கிறது வலு லேசதானே!"

## பாலத்தில் கட்டப்பட்டிருந்த சடலங்கள்

மட்டக்களப்பு ஜூன், 15

பட்டிருப்பில் இரண்டு பேருக்கு மின்கம்ப மரண தண்டனை நேற்று விதிக்கப்பட்டது.

பட்டிருப்பு பாலத்தின் இரண்டு பக்கத்திலும் இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்றுக் கட்டப்பட்டுக் கிடந்தன.

ஆயுதப்படை முகாமில் சிகை அலங்காரத் தொழிலாளியாக வேலைபார்த்து வந்தவருக்கும் மலேரியாத் தடுப்பு இயக்கத் தொழிலாளி ஒருவருக்குமே மரண தண்டனை விதிக்கப்பட்டது. (இ-எ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 15—6—1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under Number Q J 60 N 86